# வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார்? - நிகழ்ச்சி 5

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், வாழ்க்கை  ஆச்சரியம் நிறைந்திருப்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். ஒருநாள் நீங்க ரொம்ப சந்தோஷமா இருப்பதாக தோன்றும், மறுநாள் மருத்துவர் உங்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராத பெலவீனம் இருப்பதாக சொல்லலாம். விபத்துகள், இயற்க்கை சீற்றங்கள், குற்றங்கள், இயலாமை போன்றவை எந்த நொடியிலும் வாழ்க்கையை திருப்பி போடா வாய்ப்புண்டு. அப்படி நடக்கும் போது, ஜனங்க கேட்ப்பாங்க, “வாழ்க்கையில் இந்த மாதிரியான வேதனைகளில் தேவன் எங்கதான் இருக்காரு? அப்படி பட்ட மக்கள் அவர்களை காட்டிலும் அதிக வலியும் வேதனையும் அனுபவிக்கும் மக்களிடமிருந்து பதில்களை பெற வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட இரண்டு பேரை பார்க்க இருக்கிறோம்.

ஜோனி எரிக்சன் டாடா தனது பதினேழு வயதில் நீச்சலடிக்க குதித்த போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டார்கள், அதினால் குவாட்ரிப்லீகியா ஏற்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் தான் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, அவர்களுக்கு

மார்பக புற்றுநோயும் இருக்கிறது, ஒவ்வொரு நாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார்கள். Dr. மைகேல் எஸ்லே இவர் மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தார், ஆனால் தாங்க முடியாத கடுமையான வேதனை உண்டான போது ராஜினாமா செய்துவிட்டார். அவர் வேதனை மிகுந்த பல அறுவை சிகிச்சைகளை செய்து இருக்கிறார், மருத்துவர்கள் அவருடைய தண்டுவடத்தின் அனைத்து தட்டுகளையும் அகற்றி அவருடைய ஜீவனை காப்பாற்ற எல்லா எலும்புகளையும் ஒன்று சேர்த்து தண்டுவடத்தை நிற்க வைத்திருக்கிறார்கள். இப்போது அவர் பிறேன்ட்வுட் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையை நடத்தி வரும் போதகராக இருக்கிறார், டேநேன்சீ, ஆனாலும் ஒவ்வொருநாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார். வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார் என்பதற்கு இவர்கள் இருவரும் பதிலளிக்க இருக்கிறார்கள். இந்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷித்த தொகுப்பை காண அன்போடு அழைக்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கேர்பெர்க், உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நீங்கள் கேட்டது போலவே நம்முடன் இரண்டு அருமையான விருந்தினர்கள் இருக்கிறார்கள், Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடா. இன்றைய நமது தலைப்பு, தொடர்ந்து

பலவீனத்தை சந்திக்கும்போது எப்படி சோர்ந்துபோகாமல் மன அழுத்தத்திற்குள் செல்லாமல் உறுதியாக இருப்பது? கம் ஆன், இதை, விளையாட்டுக்கு சொல்ல. உங்களில் சிலர், சில சொல்ல முடியாத வேதனையில் துயரத்தில் இருந்துகொண்டு இருக்கிறீர்கள். இந்த கேள்வியை பற்றிக்கொண்டு இருங்கள்; முதலில் முக்கியமானதிலிருந்து துவங்க விரும்புகிறேன். உங்களுக்கு முதன்முதலில் சொல்லப்பட்ட போது, முதன் முதலாக அந்த கேட்ட செய்தியை நீங்க கேட்ட சமயம். அதாவது தெளிவாக சொல்லன்னுன்னா: மருத்துவர்கள் உங்களிடம், "எங்களை, மன்னித்துவிடுங்கள், இன்றைக்கு ஒரு விஷயத்தை உங்களுக்கு சொல்லியே ஆகணும். உங்களுக்கு ALS துவக்க நிலை, அல்லது உங்களுக்கு கண்ணு தெரியாம போகும், உங்களுக்கு வாதம் உண்டாக வாய்ப்பிருக்கு, அல்லது உங்களுடைய தண்டுவடம் கடுமையாக பாதிப்படைந்திருக்கிறது உங்களுக்கு முடக்குவாதம் உண்டாகும் என்றிருக்கலாம். ஜோனி மற்றும் மைகேல், முதல் முறையாக இந்த மாதிரியான தகவல்களை மக்கள் பெறுகிறார்கள், நீங்க இரண்டு பேரும் இந்த அனுபவம் இருக்கிறது, இவங்களுக்கு நீங்க என்ன ஆலோசனை சொல்ல விரும்புறீங்க?

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:** என்னை பொறுத்தவரை அது தாளம்போல இருந்தது. நா வந்து, அதாவது, நிறைய, நிறைய டாக்டர்களிடம் போனேன் இறுதியா எனக்கு தண்டுவட பிரச்சனை

இருப்பது தெரிந்தது. என்னுடைய முதுகு தண்டுல மிகப்பெரிய இணைப்பை உண்டாக்கனுன்னு சொன்னாங்க. அவர் துரிதமாக செய்யனுன்னுனாரு. MRI ஐ அந்தப்பக்கம் தூக்கி போட்டுட்டார். அவர் கையாண்ட விதம் கொஞ்சம் அசவுகரியமா இருந்தது. அந்த அறையில் இருந்து நான் வெளிய வந்துட்டேன், இதுவரைக்கும் என்னோட வாழ்க்கையில கேட்டிராத வியாதியின் பெயர்களை கேள்விப்பட்டேன். எனக்கு உண்மையாவே தெரியல L-4,5,S1ன்னா, போஸ்டீரியர் ஆன்டீரியர் இதெல்லாம் ஒன்னும் தெரியாது. என்னோட உடம்பை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. நா என்னோட கார்ல போய் உட்கார்ந்து ஸ்கூல் பையன் மாதிரி அழுதேன். நா கேட்டேன், இத்தனைக்கும் என்ன அர்த்தம்? என்னை பொறுத்தவரை, ஜான், புரிஞ்சுக்க ரொம்ப நாளாச்சு, ஆனா படிபடியா நடக்க ஆரம்பிச்சுது. எனக்கு தெரிந்த ஒரே காரியம் அடுத்து என்ன. எனக்காக காத்திற்கும் எதிர்காலத்திற்கு முன்னால இதையெல்லாம் பற்றி கவலை பட என்னால முடியல. அடுத்தது என்னவோ அதை செய்யணும். ஒரு விசுவாசியாக உண்மையா உங்க விசுவாசத்தை நீங்க சார்ந்துகொள்வீங்க. கிறிஸ்தவ நண்பர்களை தேடி ஆதரவை பெற்றுக்கொள்ள முயல்வீர்கள். நல்ல வேலையா எங்க இரண்டு பேருக்கும் மருத்துவ துறையில் கிறிஸ்தவ நண்பர்கள் இருக்காங்க, அவங்களுடைய ஆலோசனையையும் நாங்கள் தவறாமல் பெறுகிறோம். ஆனா என்ன இருந்தாலும் நீங்க தான் தீர்மானம் எடுக்கவேண்டிய நபர்.யாரும் உங்களுக்காக முடிவெடுக்க மாட்டாங்க.

**ஆன்கர்பெர்க்:** ஜோனி, நீங்க கேள்விப்பட்டபோது, அதாவது எல்லாத்துக்கும் மேல, புற்றுநோய் இருப்பதை, கேள்விப்பட்ட அந்த நாளை பற்றி சொல்லுங்க.

ஜோனி எரிக்சன் டாடா: சரி, என்னுடைய தோழிக்கு பெரிய கட்டியிருந்தது தெரிந்தது, என்னோட மார்பில் பெரிய கட்டி இருந்தது. அன்று திங்கட்கிழமை உடனே நா ரேடியோலஜிஸ்ட் கிட்ட போனேன், மேம்மொகிராம் எடுத்தோம், அல்ட்ரா சவுண்ட் பண்ணினோம். மருத்துவர் நாங்க இருந்த அறைக்கு வந்து அதிர்ச்சியான ஒரு தகவலை சொன்னாங்க. அதை அவங்க என்கிட்ட சொன்னபோது, நான், நடுக்கத்தோடு, "நீங்க சொன்னது சரியா கேட்டேனா என்று சரிபார்க்க ஒரு தடவி திருப்பி சொல்லட்டுமா. எனக்கு என்ன கேட்டுச்சுன்னா எனக்கு ஒரு பெரிய கட்டி இருக்குது அது சீரற்ற நிலையில் இருக்குது அது ஒருவேளை ஒரு புற்றுநோய் கட்டியாக இருக்கலாம் அதனால நான் ஒரு ஆன்காலஜிஸ்ட் கிட்ட போகணும், இதைதான் சொன்னீங்க?" அவங்க தலையை ஆட்டினாங்க, அதை என்னால திருப்பி சொல்ல முடிந்ததால வியப்பா பார்த்தாங்க. ஆனா, ஜான், எனக்கு தெரியும் உண்மையின் யதார்த்தத்தை நான் உடனே கிரகித்து கொள்ளாவிட்டால் நிச்சயமா உணர்ச்சி வசப்பட்டு சோர்ந்து போய் நிற்ப்பேன்னு எனக்கு நல்லா தெரியும். முடிந்த அளவு முயற்சித்தேன், இருந்தாலும், ரொம்ப நேரத்துக்கு தாக்குபிடிக்க முடியல. ஒரு அறுவை சிகிச்சை செய்துகொண்டேன், அதுக்கு பிறகு ரொம்ப நாள் அந்த காயங்கள்

ஆரும்படி படுக்கையில் இருக்க வேண்டியிருந்தது, முதல் நாள் மெடிகல் ஆன்காலஜிஸ்ட் லேப்ல கீமோதெரபிய பற்றி ஆலோசிக்க போனேன், எனது கணவர் கென்னும் நானும் உட்கார்ந்து கொண்டிருந்தோம்.

அந்த ஆன்காலாஜி டாக்டர் கிளிப் போர்டை பார்த்தார். பிறகு எங்களிடம், "சரி, ஜோனி, உங்களுக்கு சில கீமோதெரபி சுழற்சிகள் கொடுக்க வேண்டியிருக்கிறது அது அவசியம். அதற்கு நீங்க மருத்துவ மனைக்கு போய் அங்க உங்களுடைய மார்பு பகுதியில் ஒரு போர்டை அறுவை சிகிச்சை மூலம் பொருத்தி கொள்ளவேண்டும் என்றார். மிகவும் வலிமை நிறைந்த மருந்துகள்தான் உங்களுக்கு கொடுக்கப்படும். இது ஏற்கனவே தளர்ந்து போயிருக்கும் எலும்புகளை பெலகீனமடைய செய்யும். உங்களுக்கு நுரையீரல் அலர்சி, ப்ளாடர் அழற்சி உண்டாகலாம்." ஓ, அவருடைய நர்ஸ் அவரை அழைத்ததினால் அவர் எழுந்து போக நேரிட்டது. கதவை அடைத்து சென்றார். அப்ப கென்னிடம் சொன்னேன், "என்னால முடியாது., என்னால இது முடியாது. முடியவே முடியாது." நா அப்படியே என்னோட கணவருடைய மார்பில் சாய்ந்துகொண்டு துவண்டு போனேன், அவர் என்னை இறுக கட்டி தழுவினார்.

என்ன செய்வதென்று எனக்கு புரியல, இந்த நிகழ்ச்சியில் மைகேல் பல முறை குறிப்பிட்ட காரியத்தை தவிர ஒன்றும் தோனல. அடுத்தது என்னமோ அதைதான் செய்யணும். நா வீட்டுக்கு போனது என்னோட

மூன்று நண்பர்களை அழைத்தேன் அவங்க கிறிஸ்தவ ஜெப வீரர்கள்ன்னு எனக்கு தெரியும். ரேடியாலஜிஸ்ட் சொன்னதை நான் அப்படியே அவங்களுக்கு சொன்னேன் கீமோ அட்டவணையையும் அவங்ககிட்ட எடுத்து சொல்லி எனக்காக ஜெபிக்கும்படி அவங்ககிட்ட நான் வேண்டிக்கொண்டேன்.

அந்த நண்பர்கள்ல ஒருத்தர் எனக்கு 2 கொரிந்தியர் 1றை காட்டினார். மேலும் அவர்கள்இ “ஜோனிஇ அப்போஸ்தலர் பவுல் உனக்கு சிறந்த துணையாக இருக்கிறார் என்றார்.” அவங்க எனக்கு போன்ல அந்த பகுதிய வாசித்து காட்டினாங்க அங்க அப்போஸ்தலர் சொல்லுகிறார்இ “ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.அதை நான் யோசித்து பார்த்தேன். ஓ மை குட்னஸ்இ அப்போஸ்தலர் பவுலும் என்னை மாதிரியே உணர்ந்திருக்கிறாரா? இதை எதிர்கொள்வதை விட மறிப்பதே மேல்? அதுதான் இருதயத்தில் நம்பிக்கை அற்றுப்போக கூட நிலையாகும். ஆனால் அடுத்த வசனம் சொல்கிறது 2 கொரிந்தியர் 1: 8இ ‘நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக’ அதனுடைய மீதி பகுதி எனக்கு தெரியாதுஇ உங்ககிட்ட இருக்குதாஇ மைகேல்?

**எஸ்லே:** 2 கொரிந்தியர் 1:9 திலிருந்து பார்க்கலாம்இ "நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்.

டாடா: எனக்கு பிடித்த பகுதி

**எஸ்லே:** அநேகர்மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.

டாடா: அதாவது, இங்க தான் சொல்லப்பட்டு இருக்கிறது, இதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இதை தனியாக செய்ய முடியாது. என்னால தனியா முடியாது. எனக்கு உதவி தேவை. எனக்கு மைக்கேலை போன்ற நண்பர்கள் தேவை 2 கொரிந்தியர் 1ல் சொல்லப்பட்டது போல. தங்களுடைய ஜெபங்கள் மூலம் எனக்கு உதவுகிற நண்பர்கள் தேவை. இப்ப, ஓ, மை குட்னஸ், ஜெனங்க ஜெபிக்கும்போது, எங்கள் இருதயம் திறக்கப்படுகிறது. விசுவாசத்தின் அளவு ரொம்பவே அதிகரிக்கிறது; தேவனை குறித்தும் எங்களை

குறித்தும் எங்களால நம்ப முடியாத விஷயங்களை விசுவாசிக்கும் விசுவாசம் துளிர்க்க துவங்குகிறது. முன்னோக்கி செல்ல முடிகிறது அடுத்த காரியத்தை செய்ய முன்னேறுகிறோம். கிறிஸ்தவ முதிர்ச்சியில் அடுத்த படியானது மிகப்பெரிய கட்டமாக காணப்படுகிறது.

**ஆன்கர்பெர்க்:** அடுத்ததாக, மைகேல், நீங்க, எனக்கு ஞாபகமிருக்கு, நீங்க இறுதியாக இந்த கனம்பொருந்திய வேலையை செய்யணுன்னு தீர்மானம் எடுத்தீங்க, அருமையான இடம், பிரம்மாண்டமான ஊழியன், அதை விடவேண்டியிருந்தது. அடுத்த விஷயம் ரொம்ப சுலபமான ஒன்றாக இல்லை. நீங்க மிகப்பெரிய மாற்றங்களை செய்யவேண்டியிருந்தது. அந்த மாற்றங்களை உண்டாக்க உங்களுக்கு தைரியத்தை கொடுத்தது எது?

**எஸ்லே:** அதாவது, ஜான், அந்த விஷயத்தை பொருத்தவரைக்கும் போராட்டம் இருந்துட்டே தான் இருந்தது. எனக்கு முன்னால நிறைய அறுவை சிகிச்சைகள் கட்டாயம் என்ற நிலை வந்தது, அது வெறும் சாதாரண அறுவை சிகிச்சைகள் இல்லை.

**ஆன்கர்பெர்க்:** ஒருவேளை அதை செய்யாமல் இருந்திருந்தா, நீங்க எப்பவோ மரித்திருப்பீர்கள்.

**எஸ்லே:** ஒரு விஷயம் நடக்காம பாத்துக்க வேண்டியிருந்தது அதாவது என்னோட தண்டுவடத்தை காயபடுத்த கூடாது, ஏதாவது கார்

விபத்தோ, இல்ல வேறு ஏதாவது ஒரு கட்டத்தில் தண்டுவடத்துல காயம் உண்டாகிற நிலைவந்திருந்தா, என்னோட கதை முடிந்திருக்கும், அல்லது சுத்தமா முடமாகியிருப்பேன். இந்த விஷயத்தை நரம்பியல் நிபுணர்கள் எனக்கு சொன்ன போது அந்த நேரத்துல, ஒரு பக்கெட் குளிர்ந்த தண்ணீரை எடுத்து மேல ஊத்தினமாதிரி இருந்தது. அதை ஏற்றுகொள்வது கடினமா இருந்தது. நிறைய பேர்கிட்ட பேசி இருக்கேன், சிண்டியும் நானும் நிறைய மருத்துவ பயணங்கள் செய்திருக்கிறோம். தேசம் முழுவதும் சுற்றியிருக்கோம், நாட்டுல இருக்கிற ஐந்து தண்டுவட அறுவை சிகிச்சை நிபுணர்களை பார்த்தோம் எல்லாரும் ஒரே மாதிரி தான் பேசினாங்க. நாங்க சிக்காகோ திரும்பி வரும்போது சின்டிகிட்ட சொன்னேன், “இப்ப இது கடினமான தீர்மானம் கிடையாது. மிகப்பெரிய தீர்மானம், ஆனா இது கடினமான தீர்மானம் இல்ல ஏன்னா எனக்கு இதைவிட்டா வேறு வழியில்லை.” என்னை பொருத்தவரைக்கும் இது வந்து, “இதுதான் அடுத்த காரியம், ஆண்டவரே, இதனுடைய விளைவுகளுக்காக உம்மை நம்பியிருக்கிறேன் என்றிருந்தது. ஆனா நானும் சிண்டியும் ரொம்ப தெளிவாக இருந்ததோம்.

**ஆன்கர்பெர்க்:** நீங்க இந்த தீர்மானம் எடுத்தீங்க, இதனுடைய விளைவு எப்படி இருக்குன்னு உங்களுக்கு தெரியாது. இதோட சில கஷ்டங்களும் சேர்ந்திருந்தது இல்லையா.

**எஸ்லே:** ஆமா, நிச்சயமா. உபத்திரவத்தின் நேரங்கள் இருந்தது, ஆனா சில அருமையான சமயங்களும் இருந்தது. சிண்டியும் நானும் வாழ்க்கையின் அந்த அத்தியாயத்தில் இருக்கும்போது பிள்ளைங்களை பள்ளிக்கு அனுப்பிவிட்டு உட்காருவோம். அந்த நாட்கள்ல எங்க மூன்று பிள்ளைங்களும் ரொம்ப சின்னதா இருந்தாங்க. நாங்க சில காரியங்களை செய்திட துவங்கினோம். எங்க வீட்டு பக்கமாக கொஞ்சம் தூரம் நடக்க ஆரம்பித்தோம், சுமார் அரைமணி நேரம், அல்லது நாற்பது நிமிடங்கள். அப்பறம் எங்களுக்கு முன்னால ஒரு வெள்ளை மார்கர் போட் இருப்பதாக கற்பனை செய்துகொள்வோம் அது வெறுமையாக இருக்கும் அதுல, இதை எதிர்காலத்தில் தேவன் எப்படி பயன்படுத்த போகிறார் என்போம். அதுல மருந்துகளின் விபரங்களை எழுத மாட்டோம்,இதை தான் சொல்லுவோம், "நம்மை கொண்டு தேவன் என்ன செய்திடுவார்?" எங்களுக்கு ஒன்னுமே புரியல. நாங்க உடைந்த பாத்திரமாக இருக்கோமோ? இனி அவ்வளவு தானா? எல்லாம் முடிந்ததா? ஆனா தேவனுடைய பெரிதான கிருபையால, நாங்க எதிர்பார்க்காத வாய்ப்புகளை தேவன் ஏற்படுத்தி கொடுத்தார், ஜான்.

**ஆன்கர்பெர்க்:** சரி. ஒரு கடுமையான கேள்வியை கேட்கட்டுமா. நீங்க இன்னும் கூட சில சமயங்களில் சுவற்றுல மோதுறது போல மன அழுத்தத்திற்குள் போறீங்க. ஒருவேளை உங்களுக்கு, நல்லதும் இருக்கலாம், கஷ்டமான சூழலும் இருக்கலாம். அதாவது, ஒவ்வொரு

நாளும் உங்களுடைய வலி அதிகமாயிட்டு தான் இருக்குது, அதுக்கு மேல மற்ற விஷயங்கள் வந்து குவிந்திடும். எப்படி இதை சமாளிக்கிறீர்கள்? தொடர்ந்து வரும் இந்த அலைகளை மீறி நீங்க எப்படி சந்தோஷமா ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறீர்கள்?

**எஸ்லே:** ஒரு அனுமானத்தை உண்டாக்கி கொடுக்கிறார்.

டாடா: அவர் ஒரு அனுமானத்தை உண்டாக்குகிறார். சரி, துரிதமா பாப்போம். என்னை உடனே அழைக்கிற ஒரு தோழி இருக்காங்க. அவங்களோட பெயர் விக்கி ஒளிவாஸ். அவங்களுக்கும் குவாட்ரிப்லேஜிக், பலாத்காரம் செய்யப்பட்டதால முடக்குவாதம் உண்டானது. பலாத்தகாரம் செய்தவன் துப்பாக்கி எடுத்து, அவங்க கழுத்துல சுட்டுட்டான். அவங்க இரத்த ஆறாக இருந்த இடத்தில் விழுந்து கிடந்தாங்க. அந்த ரபிஸ்ட் ரொம்ப பயந்துபோய் அவங்கள தன்னோட கார்ல ஏத்தீட்டு ஒரு மருத்துவமனையோட அவசர சிகிச்சை பிரிவின் நடைபாதையில் விட்டு விட்டு ஓடீட்டான். இருந்தாலும் இந்த பெண், முப்பது வருடங்களாக, நிலையான உறுதியான கிறிஸ்தவ பெண்ணாக இருந்தவர்கள். நா மன அழுத்தத்தோடு இருக்கும்போது, விக்கிய தான் பார்ப்பேன். அவங்களை அழைத்து பேசுவேன். இந்த பெண்ணிடம் எப்போதும் ஆறுதலான வார்த்தைகளை தான் நான் கேட்பேன். இவங்க சில நேரங்களில் அவங்கள பார்த்துகொள்கிற பெண் இவர்களை இரவு நேரத்தில் படுக்கையில் படுக்க வைக்க மறந்துட்டு போயிட்டாலும் அலுத்துக்காம இரவு முழுதும் வீல்சேர்லயே

தூண்டுவாங்க. ஓ, மை குட்னஸ், அவங்க வில் சேர்லயே தூங்கிடுவாங்க. எனக்கு குறைசொல்ல என்ன தான் இருக்குது?

தேவனுடைய கிருபை அவர்களை எவ்வளவாய் தாங்குகிறது என்பதை அவர்கள் சொல்ல கேட்கும்போது, அவர்களுடைய இந்த இதமான வார்த்தைகளை தொலைபேசியின் அந்த பக்கத்தில் இருந்து கேட்டு கொண்டு இருபேன், "ஒரு நாள் குறையுது, ஜோனி, அடுத்த நாள் பரலோகத்திற்கு அருகில் செல்கிறது. விடாமுயற்சியுடன் இருப்போம். நம்முடைய புதுகை காட்டி கர்த்தராகிய இயேசுவை நாம வெட்கப்படுத்த வேண்டாம். தொடர்ந்து முன்னேறி சென்றிடுவோம் என்பார்கள்." நாமும், மைகேல் சொல்வது போல, அடுத்த காரியத்தை செய்திடலாம். அந்த கண்ணோட்டத்தை கேட்கும்போது எனக்கு உற்சாகமா இருக்கும். எல்லா மன அழுத்தங்களும் காணாமல் போய்விடும். ஏன்னா, இப்ப, நான் எனக்காக இருக்கும் நபர்களை சென்று அடைகிறேன் என்னை நன்றாக, புரிந்துகொண்டு எப்போதும், எனக்காக ஜெபித்து கொண்டிருக்கிற நபர்கள்.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், நீங்க மன அழுத்தத்தின் உச்சத்தை கூட அனுபவித்திருக்கீங்க அதாவது இதுக்கு மேல போராட முடியாது என்ற நிலை. உங்களுக்கு, பேச கூட முடியாத அளவுக்கு வலி அதிகமாயிருக்கும், இல்லையா? அப்ப நீங்க கீழ்தளத்தில் இருக்கிற அறைக்கு போயிடுவீங்க. அந்த அறைக்கு போய் அப்ப நீங்க, என்ன செய்திடுவீங்க?

**எஸ்லே:** அது, அப்படியே இழுத்து விடுறது மாதிரி இருக்கும். என்னோட நான்காவது அறுவைசிகிச்சைக்கு முன்னால இரண்டு படுக்கை போட்டு நாற்பத்தி ஐந்து டிகிரீ அங்கில்ல இருபத்தி மூன்றை மணிநேரம் படுத்திருப்பேன். உண்மையா ரெஸ்ட் ரூம் போக தவழ்ந்து போய் தவழ்ந்து தான் வருவேன். சிண்டி எனக்கு துணி மாற்றி விடுவா. என்னோட அடுத்த அறுவை சிகிச்சைக்காக மூன்று நான்கு வாரங்கள் காத்துட்டு இருந்தேன். இருளா இருக்கும். சந்தோஷம் இருக்காது. அதாவது, நா வேதத்தை வாசிப்பேன், என்னோட வேதனையை விளக்கி சொல்ல முடியாது. என்னுடைய நிலையை பற்றி எனக்கு ரொம்ப நல்லா தெரியும் ஒரு மனிஷனாக என்னோட சூழ்நிலையை என்னால மேற்கொள்ள முடியாதுன்னு தெரியும் ஏன்னா அப்ப ரொம்பவே எமாற்றத்துல இருந்தது, எதிர்காலத்தை பற்றிய கொஞ்சம் நம்பிக்கை இருந்தது.

யாக்கோபுல இருக்கிற வேத பகுதியை தவறாக புரிந்துகொள்கிறோம், “மேலும் சகோதரரே நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல் பூரணராயும் நிறைவுள்ளவராயும் இருக்கும்படிக்கு, பொறுமையான பூரண கிரியை செய்யக்கடவது.” சரி, என்னுடைய தாங்க முடியாத வேதனையில் நான் சந்தோஷமா இருக்கனுன்னு இங்கு

சொல்லப்படவில்லை. யாக்கோபு என்ன சொல்கிறார் என்றால், சந்தோஷமா எண்ணுங்க, உபத்திரவம் வரும்போது, ஏன்னா அந்த பொறுமையானது உங்களில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கிடும் அப்பத்தா நீங்க திரும்பி பார்க்கும்போது, “தேவனுடைய கிருபையினால் அந்த மூன்று நான்கு வாரங்களை நான் கடந்தேன் என்பீர்கள். தேவனுடைய கிருபையினால தான் இரண்டு வருடங்கள் ஸ்ட்ரைகர்பிரேமை என்னால சமாளிக்க முடிந்தது. தேவனுடைய கிருபை என்பீர்கள்...” இதுதான் இன்னும் முன்னோக்கி செல்ல உங்களுக்கு தைரியத்தை கொடுப்பதாக இருக்கிறது, “இதுவே முதலும் கடைசியும் அல்ல. தேவனுடைய கிருபை இருப்பதால நான் தொடர்ந்து விடாமுயற்சியுடன் இருப்பேன், அடுத்த காரியத்தை செய்வேனா, என்று யோசிபீர்களா?

இதுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்டு இருக்கனுன்னு இல்ல, நா அப்படியில்ல, ஜான். ஆனா ஜோனி ஏற்கனவே சொன்ன விஷயத்தை முன்வைக்கிறேன், என்னோட சகோதரர்களை விட நெருக்கமான ஆறு நண்பர்கள் இருக்காங்க. நா அந்த இருளான இடத்தில் இருக்கும்போது, அவங்க கிட்ட என்னால மனவிட்டு பேச முடியும். அவர்களில் ஒருத்தர் சொல்வாரு, “இப்ப உனக்கு ஆவிக்குரிய ஒரு அரை தேவை படுகிறது என்பார்.” இன்னொருத்தருக்கு என்ன எப்ப ஊக்குவிக்கனுன்னு தெரியும். அவங்களுக்கு என்ன ஆத்துமாவை தெரியும்; என்னுடைய ரகசியங்கள் தெரியும்; என்னை நேசிக்கிறாங்க. என்னை நானே ஊக்குவிக்க

முடியாம பெலகீனமா சோர்வா இருக்கும்போது அவங்க எனக்காக இருப்பாங்க.

அந்த சிறிய நேரத்தை பார்க்கும் விதம் அருமையாக இருக்கும், மற்ற விசுவாசிகளின் ஊக்கப்படுத்தும் விதம், சிலர் வேதனையோடு, இருப்பதை புரிந்துகொண்ட நடந்திடுவார்கள். அவங்க உபத்திரவப்படுகிற நபரோடு முழுவதுமாக அடையாளப்படுத்தி கொள்ள முடியாது, இருந்தாலும் வேதனை படுவதை புரிந்துகொள்வார்கள். ஜோனி ரொம்ப அழகா சொன்னாங்க, அதைதான் நானும் சொல்றேன், சகோதரரை விட நெருக்கமான நண்பர்கள் உங்களுக்கு இருக்கணும், அன்போடு உங்ககிட்ட சத்தியத்தை பேசுகிறவர்கள். எனக்கு இந்த நான்கு ஐந்து பேர் இருக்காங்க இன்னைக்கு நான் கூப்பிட்டாலும், இன்னைக்கு மத்தியானத்துக்குள்ள ஏ வீட்டுல வந்து நிப்பாங்க அல்லது எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமா வருவாங்க, எனக்காக இவங்க நிப்பாங்க.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், இப்ப முடிவை எதிர்கொண்டு இருக்கிறவர்களோடு பேசும்படி விரும்புகிறேன், சரியா? அவங்களுக்கு பரலோகம் என்பது ஜீவனுள்ளோர் தங்கும் இடம் என்று நிச்ஹ்சயம் தெரிந்திருக்க விரும்புகிறேன், அவங்க தை தவறவிட விரும்பவில்லை, சரியா? இது நிரந்தரமல்ல. கர்த்தராகிய இயேசுவை அறிந்துகொண்டால் அந்த நிரந்தர வாழ்வு நல்லா இருக்கும். இதை கேட்டு கொண்டு இருக்கிற நபர்களில் தனிப்பட்ட விதத்தில் இயேசுவை

ஏற்றுகொள்ளாமல் இருப்பவர்களுக்காக பரிதபிக்கிறேன். மேலும், மைகேல், எப்படி அவர்கள் கர்த்தராகிய இயேசுவை அறிந்துகொள்வதென்று நீங்க தெளிவா சொல்லும்படி கேட்கிறேன், அவங்க மரிக்கும்போது பரலோகம் போகிற நிச்சயத்தை பெறனும்.

**எஸ்லே:** இதற்கு பலவிதங்கள் இருக்குது, ஜான், ஆனா எனக்கு பிடித்தது பவுல் ரோமர் 3:23ல சொல்றாரே, “எல்லாரும் பாவம் செய்து தேவனுடைய மகிமையை இழந்தவர்களாக நிற்கிறோம்.” தேவன் பரிசுத்தராக இருப்பதை கற்பனை செய்து பாருங்க, பரிசுத்தமானவர், நாம அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்டு இருக்கோம். நம் ஒவ்வொருவரை பற்றி அவருக்கு நல்லா தெரியும். அந்தரங்கமான காரியங்கள் கூட தெரியும். நம்மை நேசிக்கிறார். நாம எப்படி பட்டவர்களாக இருந்தாலும் சரி, நாமும் மகிமையை இழந்து நிற்கிறோம். உங்களுக்கு நான் ஒரு பேஸ்பால் கொடுக்கிறேன் நீங்களும் அதை வாங்கீக்கிறீங்க, நா உங்ககிட்ட, நீங்க வாஷிங்டன் DC ய தகர்க்கனுன்னு சொல்றேன், நீங்க நான் சொன்னதையும் தாண்டி வீசியிருக்கலாம், அல்லது உங்களை விட அதிக தூரம் வீசி இருக்கலாம். ஆனா இரண்டு பேரும் நிச்சயமா தேசத்தின் தலைநகரமான சாட்டனாகோவ நெருங்கியிருக்க மாட்டோம், டேநேன்சி.

எல்லாரும் தவறுகிறோம். இப்ப, பாவத்தின் நிலை இதுதான், பவுல் தொடர்ந்து சொல்லும்போது ரோமர் 6:23ல, பாவத்தின் சம்பளம் மரணம்

என்கிறார். அப்ப, உங்களுக்கும் எனக்கும் ஒரு பேசெக் இருக்கு, சம்பாத்தியத்தை பெறுகிறோம். நிறைய பேருக்கும் வாழ்வாதாரத்திற்கு ஏற்ற வேலை இருக்குது சம்பாதிக்கிறாங்க. நமக்கு ஏற்ற கூலியை பெற்றிடுவோம், அது போதுமானதாக நமக்கு தேவையானதாக இல்லாமல் இருக்கலாம், ஆனா இறையியல் படி மரணமும் சம்பளம் தான். நாம விழுந்து போனவங்களா இருப்பதால, பாவிகளாக இருப்பதால, நமக்கு கிடைக்கும் சம்பளம் மரணமாக இருக்கும். மேலும் ரோமர் ஐந்து எட்டுல , இது திறவுகோல் வசனங்களில் ஒன்று; அதாவது, மார்டின் லூத்தர் இந்த வசனத்தை பார்த்து ஒரு கத்தோலிக்க பாதிரியாரா நிலைகுலைந்து நின்றார். “நாம் பாவிகளாய் இருக்கும்போது கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பை வெளிப்படுத்தினார்.” இது மறுக்கமுடியாத மறுமலர்ச்சியை உண்டாக்கியது. நாம பாவிகளாக இருக்கும்போது நம்மை நேசிக்கும் இந்த காரியத்தைவிட மேலானது ஒன்றும் இருக்க முடியாது.

பல சமயங்களில் மார்க்க அமைப்புகளில், சபைகளில், பிரிவினர் என்ற பின்னணியில், நிறைய விஷயங்கள் சேர்க்கப்படுது அது நமக்கு நல்லது என்று நினைத்துகொள்ளுகிறோம். நாம தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும். இந்த மாதிரி இல்ல. இங்க அவர் யார் என்பதை நாம அறிந்துகொள்வதற்கு முன்பு அவர் கிறிஸ்துவை நமக்காக அனுப்பி மரிக்கும்படி அனுமதித்து நம்மீது உள்ள நேசத்தை

வெளிபடுத்தியிருக்கிறார். மேலும் இந்த பயணத்தில் ஏதோவொரு கட்டத்தில் நாம அவரை சந்திக்கும் சிலாக்கியம் பெறுகிறோம். அப்ப அந்த அன்பின் வெளிப்பாடு உயிர்பெற்று எழும்புகிறது.

அதற்கு பிறகு பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் விசுவாசிகளுக்கு சொல்லுகிறார், “கிருபையினால் விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் மேன்மைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானது அல்ல.” நாம எவ்வளவு நல்லவங்களா இருந்தாலும் சரி, அவருடைய அன்பை பெற முடியாது. இந்த அருமையான ஈவாகிய இரட்சிப்பு என்பது விசுவாசத்தின் மூலம் பெறப்படுகிற ஈவாக இருக்கிறது. யாராவது உங்களுக்கோ எனக்கோ ஒரு பரிசை கொடுக்கும்போது நாம நம்ம காசோலையை எடுத்து சொல்லுங்க, “இதுக்கு எவ்வளவு பணம் என்று கேட்பதில்லை.நன்றி என்றே சொல்லுவோம். அதை பெற்றுக்கொண்டு, அந்த பரிசை பாதுகாப்போம். இப்ப, நாம எல்லாரும் பாவிகள்; நாம பாவம் செய்ததால தேவனுடைய மகிமையை இழந்து நிற்கிறோம். மரணத்திற்கு பாத்திரமாக இருக்கிறோம்; நாம அவரிடமிருந்து பிரிக்கப்படும் நிலையில் இருக்கோம். அவர் நம்மை நேசித்தார். நமக்கு பதிலாக நமது ஸ்தானத்தில் மரித்தார். கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தால் போதும் நாம நித்திய ஜீவனையும் பாவத்திலிருந்து மன்னிப்பையும் பெற்றுகொள்வோம்.

சரி, சிலுவையில் அறையப்படும் அந்த சம்பவம் எனக்கு ரொம்ப பிடிக்கும் அருகில் இரண்டு திருடர்கள் இருந்தார்கள். அவங்க என்ன தவறு செய்தார்கள் என்று நமக்கு தெளிவா தெரியாது, ஆனா அவங்களோட குற்றம் அவங்களுக்கு இந்த தண்டனையை கொடுத்தது. இயேசுவோடு கீட இவங்களுக்கு சிலுவையில் அறையப்பட்டார்கள். ஒருத்தர் குற்றம் சுமத்துகிறான், "நீர் தேவனுடைய குமாரனேயானால், எதையாவது செய்திடும்." என்று சொல்கிறான், "எங்களை விடுவியும்! உம்மையும் விடுவித்து எங்களையும் விடுவியும்." மற்றொருவன் பேசத்துவங்கி இவனை கடிந்துகொள்ளுகிறான், "அவர் எந்த குற்றமும் செய்யாதவர். நமக்கு இது தேவைதான். நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது என்னை நினைத்துகொள்ளும் என்றான்."

சரி, ஜான், இதை மனுகுலமாக நான் பார்க்கிறேன். நாம எப்போது தேவன் ஏதாவது செய்யணுன்னு பார்த்துட்டு இருக்கோம், "என்னோட இந்த வேதனையில் எனக்கு ஏதாவது செய்திடும், "இந்த வலி மாற ஏதாவது செய்யுங்க." என்னோட வியாதி மாற ஏதாவது செய்யுங்க." என்னோட பிரச்சனை மாற ஏதாவது செய்யுங்க;" என்னோட கணவர் என்னோட மனைவிக்காக ஏதாவது செய்திடுங்க." அல்லது என்ன சொல்றோம், "என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்குதா? அல்லது அந்த மனுஷனை போல சொல்கிறோமா, அந்த பாவி, சொல்கிறான், "எதற்கும் பாத்திரமானவன் அல்ல, அதுதான் தேவனுடைய இருதயத்தை நெகிழ செய்தது என்று சொல்லலாம். அது அவருக்கு

ஏற்றதாய் இருந்தது. அவர் பூரணமான மக்களை தேடவில்லை, தங்கள் பாவத்தை உணர்ந்திடும் பாவிகளை தேடுகிறார், தங்களை தேவையை உணர்ந்து, கிறிஸ்துவின் மீது மட்டும் தங்கள் நம்பிக்கை விசுவாசத்தை வைப்பவர்களை தேடுகிறார். அதற்கு பிறகு அவர் உங்களுக்கு மிகப்பெரிய ஈவை கொடுக்கிறார் அதுதான் நித்திய ஜீவன்.

இதற்கு வேறு எந்த குறுக்கு வழியும் இல்ல. இத்தனை வருடங்களாக இதை பகிர்ந்துகொண்டு வருகிறோம், ஜோனியும் சொல்லீட்டு வர்றாங்க, நீங்களும் இதை பகிர்ந்திருப்பீர்கள், இதுக்கு மேல எதுவும் இல்ல. கிறிஸ்துவை நம்பவேண்டும் உங்கள் இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை மாத்திரம் நம்ப வேண்டும். உங்க பெருமையை தள்ளி வையுங்க, உங்க பிரச்சனையை தள்ளிவைங்க, உங்க கவலை மற்றும் எதுவாக இருந்தாலும் தள்ளிவைங்க. அவர் உங்களை நேசிக்கிறார்; உங்களுக்காக மரித்திருக்கிறார், உங்களுக்கு பதிலாக, உங்க இடத்தில் மரித்தார். உங்களுக்கு இலவச ஈவாகிய நித்திய ஜீவனை தருகிறார், பாவங்களை மன்னிக்கிறார். அந்த பக்கத்தில் இருந்து இந்த பக்கத்துக்கு வாங்க, இந்த பகுதியில் நடக்க துவங்குங்க, அதாவது மரணத்திலிருந்து, நித்திய ஜீவனுக்குள் நடங்க. இதுவரைக்கும் நீங்க எதிர்பார்க்காத இடங்களுக்கு கொண்டு செல்வார் மேலான காரியங்களை உங்களுக்கு கொடுத்திடுவார். உங்களுக்காக எனக்காக தன்னுடைய நேச குமாரனை மரிக்கும்படி அனுப்பினவருடைய ஐக்கியம் மேலான ஒன்றாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இப்போதும் இதை கேட்டு கொண்டு இருக்கிறவர்களை நீங்கள் ஜெபத்தில் நடத்தும்படியாக நான் விரும்புகிறேன் அவர்கள் கிறிஸ்துவுடனான தங்கள் தனிப்பட்ட ஐக்கியத்தை துவங்கிட வேண்டும். மேலும் தேவன், இதை பார்த்துகொண்டு இருக்கிறார், அவர்கள் சத்தத்தை கேட்டு அவர்களை இரட்சித்திடுவார். சரி, மைக்கேல், ஜெபத்தில் நடத்துங்கள்.

**எஸ்லே:** பிதாவே, இதை கேட்டு கொண்டிருக்கிற ஜனங்களுக்காக வருகிறோம் எப்படி இதை கேட்டுகொண்டிருந்தாலும் சரி, நீர் அவர்களை நேசிப்பதை அறிந்திடட்டும், நீர் அவர்கள் மேல் கரிசனை உடையவராக இருக்கிறீர் ஏமாற்றத்தில் இருந்தாலும், கோபம், பயம், எதுவாக இருந்தாலும் சரி. நீர் அவர்களை நேசிப்பதை அறிந்துகொள்ளும்படி செய்திடுவீரா? எளிமையான விசுவாசத்தின் மூலம், உம்மீது அவர்கள் நம்பிக்கை வைப்பதன் மூலம், கிறிஸ்துவின் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கும் போது, நீர் அவர்களுக்கு பாவ மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் அளிப்பதாக வாக்குரைத்திருக்கிறீர். நாங்க ஜீவித்திருக்கும்படி நீர் மரிப்பதராக பிறந்தீர், அதை அவர்கள் ஏற்றுகொண்டால் போதுமானது.

பிதாவே, உம்மில் நம்பிக்கை வைக்கிறேன், நான் பாவி என்பதை புரிந்துகொண்டேன், பாத்திரவானாக கருதப்படாதவன். ஆனா உம்முடைய கிருபையினால் நீங்க எனக்கு பதிலாக, எனக்கு சார்பில், எனக்காக மரித்தீர். நீர் எனக்காக மரித்தீர், அதினால் நீர் என்னை

நேசிப்பதை வெளிபடுத்தி, என்னுடைய சரீர பிரச்சனைகளை தீர்க்கும்படியான வழிகளை மட்டும் வெளிபடுத்தாமல், ஆவிக்குரிய நிலையையும் சரிபடுத்தினீர். இப்போதே நான் உம்மீது விசுவாசம் வைக்கிறேன். உம்மை நான் நம்புகிறேன். எனக்கு என்னால் செய்திட முடியாத காரியங்களை இயேசு கிறிஸ்து எனக்காக செய்வார் என்று விசுவாசிக்கிறேன். என் ஜெபத்தை கேட்பதற்காக நன்றி. நித்திய ஜீவன் என்ற இலவச ஈவை எனக்கு கொடுத்ததற்காக நன்றி. இயேசு யார் என்பதை அறிந்துகொள்ளும் ஞானத்திலும் கிருபையிலும் வளர எனக்கு உதவிடும். இயேசுவின் நாமத்தில் ஜெபிகிறோம், ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, இந்த ஜெபத்தை முதல் முறை நான் செய்தபோது, ஒருவர் என்னிடம் சொன்னார், “வேத வசனத்தை பாரு.” அது ரோமர் 10:13. நான் அந்த வசனத்தை வாசித்தேன் அதாவது, “யாராவது” என்ன சொல்கிறதென்றால், “இந்த யாராவது யாரென்று தெரியுமா என்றார், அதற்கு நான், “எல்லாரையும் குறிக்கிறது என்றேன், என்னை பற்றி சொல்கிறது.. தேவனுடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும்.” இப்ப நீங்க என்ன செய்தீங்க? நீங்க இப்ப ஜெபித்து தேவனுடைய நாமத்தை தொழுது கொண்டீர்கள். அந்த வசனத்தின் கடைசி பகுதிய பாருங்க. நீங்க இப்படி செய்யும்போது ஆண்டவர் என்ன செய்வதாக சொல்கிறார் தெரியுமா? கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” இது உங்களுக்கான தேவ வாக்குத்தத்தம், ரோமர் 10:13.

இது ஒரு அருமையான தொடர். ஜோனி மற்றும் மைகேல், நீங்க இங்க வந்ததுல ரொம்ப சந்தோஷம். நேயர்களும் நீங்க பேசினத கேட்டு பயனடைந்திருப்பார்கள். பல முக்கியமான கேள்விகளுக்கு நீங்க பதில் தந்திருக்கிறீங்க. நிறைய பேரை நீங்க ஊக்குவித்திருக்கிறீங்க. இங்க வந்ததற்கு உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன். இங்க வருவதற்கான பிரயாணம் கடினமாக இருந்திருக்கும், பொருட்படுத்தாமல் வந்ததற்கு நன்றி.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2016 A.T.R.I.